# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை

# Annual Performance Report

# 2023

**ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව**

**මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය**

**தேசிய திட்டமிடல் திணைக்களம்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

**Department of National Planning**

**Ministry of Finance, Economic Stabilization and National Policies**

**2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை**
**நிறுவனத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இலக்கம் 237**

## உள்ளடக்கம்


**அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்** ........ 54

1.1. அறிமுகம் ........ 54

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் ........ 54

1.3. பிரதானமான செயற்பாடுகள் ........ 54

1.4. நிறுவன விளக்கப்படம் ........ 56

1.5. திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள் ........ 57

1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள் ........ 57

1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் ........ 57

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** ........ 58

2.1. சமூக உட்கட்டமைப்பு வசதிகள் ........ 58

2.2. விவசாயம் ........ 63

2.3. கைத்தொழில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ........ 70

2.4. வணிக உட்கட்டமைப்பு ........ 71

2.5. ஆளுகை ........ 74

2.6. சுற்றாடல் முகாமைத்துவம் ........ 76

2.7. சமூகப் பாதுகாப்பு ........ 78

2.8. பிரதேச அபிவிருத்தி ........ 80

**அத்தியாயம் 03 - 2023 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்** ........ 82

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று ........ 82

3.2. நிதி நிலைமை தொடர்பான கூற்று ........ 83

3.3. காசுப்பாய்ச்சல் தொடர்பான கூற்று ........ 84

3.4. நிதிக் கூற்றிற்கான குறிப்பு ........ 85

3.5. வருமான சேகரிப்பின் செயற்றிறன் - பொருத்தமற்றது ........ 85

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன் ........ 85

3.7. நி.பி 208 இற்கு அமைவாக, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் ஒரு முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள ........ 85

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று ........ 86

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 86

**அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள்** .......... 86

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்) .......... 86

**அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயற்திறன்** .......... 87

5.1 இனங்காணப்பட்டுள்ள குறித்த நிலையான அபிவிருத்தி இலக்குகள் .......... 87

5.2 நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் .......... 87

**அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு** .......... 88

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் .......... 88

6.2 தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மனித வளம் மற்றும் செயற்றிறன் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு .......... 88

6.3 மனித வள அபிவிருத்தி .......... 88

**அத்தியாயம் 07 - உடன்பாட்டறிக்கை** .......... 95

# அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்

## 1.1. அறிமுகம்

தேசிய திட்டமிடல் திணைக்களம் 1956 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரின் தலைமையின் கீழ் தேசிய திட்டமிடல் சபையாக நிறுவப்பட்டு முதன்முறையாக திட்டமிடல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் விதத்தில், முழுமையான நாட்டையும் உள்ளடக்கியவாறு விரிவான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டமொன்றை முன்வைத்தது. 1961 ஆம் ஆண்டில் இச்சபை மேலும் பலப்படுத்தப்பட்டு பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் திட்டமிடல் திணைக்களமாக நிறுவப்பட்டது. இதன் கீழ், இத் திணைக்களம் ஒரு குறுகிய கால அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் தயாரித்து, திட்டமிடல் செயற்பாட்டிற்காக உருட்டல் திட்ட (rolling plan) எண்ணக்கருவை முதல் முறையாக அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர், 1965 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டு மூலதன வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை போன்றன ஒப்படைக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், அடுத்தடுத்த அரசாங்கங்கள் இதனை அவ்வப்போது நிதி, திட்டமிடல் மற்றும் கொள்கை மேம்பாட்டுக்கு பொறுப்பான அமைச்சுக்களுடன் இணைத்திருந்தன. தற்போது, இலங்கையின் பிரதானமான அபிவிருத்தி ஆலோசகராகவும், வசதிகள் வழங்குநராகவும், நிதிப் பிராமண எண் 3 (2) மற்றும் எண் 35 ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப திணைக்களம் அதன் செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

## 1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

### தொலைநோக்கு

தேசத்தின் மிகை திறனுடைய கொள்கை ஆலோசகராகவும் அபிவிருத்தியில் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

### பணிக்கூற்று

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வாண்மையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

### நோக்கங்கள்

1. அரச முதலீடுகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல்.
2. குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் பொது முதலீட்டின் மூலம் சமூக-பொருளாதார நன்மைகள் உயர்ந்த பட்சத்தில் காணப்படும் விதத்தில் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப வகுக்கத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 1.3. பிரதானமான செயற்பாடுகள்

- தேசிய மற்றும் துறைசார் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை தொகுப்பதற்கான பங்களிப்பை வழங்குதல்.
- தேசிய கொள்கைகளை மீளாய்வு செய்து அமைச்சரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பித்தல்.
- நடுத்தர கால பொது முதலீட்டுக் கட்டமைப்பை தயார் செய்து புதுப்பித்தல்.
- பொது முதலீட்டுத் திட்டத்திலுள்ள கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல்.

- நிதி உதவிக்கான அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
- அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்குதல்.
- தேவையானாவிடத்து புதிய திட்டமிடல் முறைகளைப் பயன்படுத்துதல்.
- தேவையானாவிடத்து தேசிய மற்றும் துணைத் தேசிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வசதிகள் வழங்குதல்.
- விசேட / பிரதேச ரீதியிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- தேசிய திட்டமிடல் செயன்முறையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை பிரதானப்படுத்துதல்.
- பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவு செலவு திட்டத்திற்கான பங்களிப்பை வழங்குதல்.
- அபிவிருத்திப் பங்குதாரர்களுடன் அபிவிருத்தித் தேவைகளை இனங்காண்பதற்கான வசதிகளை வழங்குதல்.
- விசேட பணிகளில் பங்கேற்றல்.
- தேவையானாவிடத்து நிகழ்கால விவகாரப் பிரிசினங்கள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல்.
- திட்டமிடல் மற்றும் மேற்பார்வையுடன் தொடர்புடைய தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான ஊழியர்களின் திறன் விருத்தி.
- தேசிய திட்டமிடல் திணைக்கள உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி.
- பொது நிர்வாகம் மற்றும் நிதி.

## 1.4. நிறுவன விளக்கப்படம்



## 1.5. திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை திறனாக நிறைவேற்றுவதற்காக, திணைக்களம் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவ் 8 பிரிவுகளும் பொருளாதார அபிவிருத்தித் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேலும் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுகளும் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் துறை தொடர்பான நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் தயாரிக்கப்படுகின்ற கருத்திட்ட முன்மொழிவுகள், பொது முதலீட்டுக் கொள்கை தயாரிப்பு, கொள்கை தயாரிப்பிற்காக நிரல் அமைச்சுக்களிற்கு பங்களிப்பை வழங்குதல் மற்றும் பிற தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான பொறுப்பேற்றல்.

இதற்கு மேலதிகமாக, பேரண்டப் பொருளாதார திட்டமிடல், தகவல் விநியோகித்தல் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவதற்காக மூன்று தனித்தனி ஆதரவு அலகுகள் உள்ளன.

1) தகவல் அபிவிருத்தி மையம்
2) நிர்வாகப் பிரிவு
3) நிதிப் பிரிவு

**திணைக்களத்தின் பிரிவுகள்**

- சமூக உட்கட்டமைப்பு
- விவசாயம்
- கைத்தொழில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா
- வணிக உட்கட்டமைப்பு
- ஆளுகை
- சுற்றாடல் முகாமைத்துவம்
- சமூகப்பாதுகாப்பு
- பிரதேச அபிவிருத்தி

## 1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

## 1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

(a)

1. கருத்திட்டத்தின் பெயர்: உலக வங்கி நன்கொடைகளின் கீழ் இயங்கும் முதலீட்டு கருத்திட்டங்களின் அவசரகால பதிலளிப்பு
2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: உலக வங்கி
3. கருத்திட்ட மதிப்பீடு: ரூ.**10,491** மில்லியன்
4. கருத்திட்ட காலம்: **2020.09.30 – 2023.03.30**

(b)

1. கருத்திட்டத்தின் பெயர்: Promoting Autonomy, Literacy and Attentiveness through Market Alliances (PALAM/A)
2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: ஐக்கிய அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி
3. கருத்திட்ட மதிப்பீடு: ஐக்கிய அமெரிக்க டொலர்கள் **26** மில்லியன் மற்றும் ரூபா **140** மில்லியன்
4. கருத்திட்ட காலம்: **2021 -2024**

(c)

1. கருத்திட்டத்தின் பெயர்: Inclusive Connectivity and Development Project Contingent Emergency Response Component (ICDP CERC) for Minimizing the Impact of the Economic Crisis and restoring Social Stability
2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: உலக வங்கி
3. கருத்திட்ட மதிப்பீடு: **325** மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்
4. கருத்திட்ட காலம்: **09.05.2022 - 09.05.2024**

(d)

1. கருத்திட்டத்தின் பெயர்: Food Security and Livelihood Recovery Emergency Assistant Project
2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: ஆசியா அபிவிருத்தி வங்கி
3. கருத்திட்ட மதிப்பீடு: **203.36** மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்
4. கருத்திட்ட காலம்: **09.09.2022 - 31.08.2024**

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

## 2.1. சமூக உட்கட்டமைப்பு வசதிகள்

**கல்வி**

ஒரு நாட்டின் தொழிலாளர்களின் தரத்தை உயர்த்தும் சமூக மற்றும் கலாச்சார விழுமியங்கள் நிறைந்த பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைவதில் ஒரு நாட்டின் கல்வி முறை முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் பிரகாரம், ஒரு நாட்டின் தொழிலாளர்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை விருத்தி செய்வதன் மூலம், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பிற கல்வி மற்றும் தொழில்முறை நிறுவனங்களின் ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு மகத்தான பங்களிப்பை வழங்க முடியும்.

நாட்டின் பெரும்பாலான பாடசாலைகள் இலவசக் கல்வியின் ஒரு பகுதியாக அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகின்றன. அதன் பிரகாரம், பாடசாலைத் தொகுதியில் **10,146** அரசாங்கப் பாடசாலைகள் (**396** தேசியப் பாடசாலைகள் மற்றும் **9,750** மாகாணப் பாடசாலைகள்) காணப்படுவதுடன், **93** அரச அங்கீகாரமுடைய தனியார் பாடசாலைகள், **819** பிரிவெனாப் பாடசாலைகள் மற்றும் **30 விஷேட** பாடசாலைகள் (விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்கு) உம் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, நிறுவனங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுமார் **300** சர்வதேசப் பாடசாலைகள் நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. அரசாங்கப் பாடசாலைகளில் மொத்த மாணவர் எண்ணிக்கை சுமார் **4** மில்லியன்களாகக் காணப்படுவதுடன் **241,054** ஆசிரியர்கள் இப் பாடசாலைகளில் பணிபுரிகின்றனர்.

எனினும், **2020** இல் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் **2021** இல் பொருளாதார நெருக்கடி என்பன, கல்வித் துறையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்தி என்பனவற்றை அடைந்து கொள்வதற்கு இத் துறையின் சீர்திருத்தங்களின் அவசரத் தேவையை உணர்ந்து, முன்பருவப் பாலர் கல்வி, பொதுக் கல்வி (ஆரம்ப, கனிஷ்ட இடை நிலை மற்றும் சிரேஷ்ட இடை நிலை), உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்ற அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய எதிர்வரும் **10** வருட காலப்பகுதிக்குரிய (**2023-2033)** தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பை (NEPF) தயாரிக்கும் பணியில் அரசாங்கம்

ஈடுபட்டுள்ளது. மேலும், இக் கல்விக் கொள்கை கட்டமைப்பின் மூலம் கல்வியமைப்பில் தேவையான நிர்வாக, பாடத்திட்ட மற்றும் மதிப்பீட்டு சீர்திருத்தங்களுக்கான முன்முயற்சிகளையும் முன்மொழிந்துள்ளது.

**பொதுக் கல்வித் துறையில் தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற பிரதான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்**

- பாடசாலை உணவு வேலைத் திட்டம்
- பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (இலங்கை அரசு / உலக வங்கி)
- இடைநிலைக் கல்வித் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (இலங்கை அரசு / ADB)
- தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் / OFID)
- தொழில்நுட்ப விடய ஓட்டத்திற்காக தேசியக் கல்விக் கல்லூரியை நிறுவுதல் (இலங்கை அரசு / KOICA)
- இடைநிலைக் கல்விக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையங்களை நிறுவுதல் (இலங்கை அரசாங்கம் /EDCF)
- பாடசாலை மாணவர்களுக்காக பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள்

**2023 இல் நிறைவடைந்த பணிகள்**

- முறையான நியாயப்படுத்தப்பட்ட 06 மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் / வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டமை.
- கல்வித் துறை தொடர்பான 20 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கட்டமை.
- கல்வித்துறை தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
- பல்வேறு தரப்பினரால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அறிக்கைகள் / ஆவணங்கள் / திட்டங்களுக்கான கருத்துகள் / அவதானிப்புக்கள் தயாரித்தல்

**உயர் கல்வி**

ஒரு நாட்டின் செழிப்பு அதன் மனித வளத்தின் தரத்தால் அளவிடப்படுகிறது. இங்கு அரசாங்கத்தின் நோக்காக அமைவது மனித வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் விசேடமாக சமூக-பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமான காரணியான கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். எனவே, உயர்கல்வியின் சாத்தியமான பகுதிகளை அடையாளம் காணவும், உற்பத்தி மற்றும் சமூக ஈடுபாடு கொண்ட குடிமக்களை உருவாக்க பொது நிதியை முதலீடு செய்யவும் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. திறமையான கல்வித் தகைமைகளுடன் தொழில் புரியும் ஆட்களை உருவாக்குதல் அரசாங்கம் எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாகும். தொழில்நுட்ப பரிணாமம் மற்றும் உலகமயமாக்கல் என்பவற்றுடன் உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான மாணவர்களின் நடமாட்டத்தை அதிகரிக்க இலங்கையில் புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் பிரகாரம், அரச பாடசாலைகளிற்கு வருடாந்தம் முதலாம் தரத்திற்கு அண்ணளவாக 330,000 பிள்ளைகள் அனுமதிக்கப்படுகின்றனர். எனினும், பல்கலைக்கழகங்களின் வரையறுக்கப்பட்ட கொள்திறன் காரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியான மொத்த மாணவர்களில், அண்ணளவாக 20% - 25% இனரே வருடாந்தம் அரசாங்க பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

உயர்கல்வித் துறையில், பல்கலைக்கழக மானியக் குழுவின் கீழ் இயங்கும் பதினேழு அரசப் பல்கலைக்கழகங்கள், பாராளுமன்ற சட்ட மூலத்தின் கீழ் நிறுவப்பட்ட ஐந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி அமைச்சினால் அங்கீகாரம் பெற்ற 23 அரச சாரா உயர் கல்வி நிறுவனங்கள் (NSHEIs) உள்ளன. மேலும், பட்டம் வழங்கும் பல தனியார் பல்கலைக்கழகங்கள் நாட்டில் இயங்கினாலும் அவை கல்வி அமைச்சின் கீழ் மேற்பார்வை செய்யப்படுவதில்லை.

**நிறைவடைந்த பணிகள்**

- நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான 08 மதிப்பீட்டு அறிக்கைகள் தேசிய வரவு செலவுத் திணைக்களம் ∴ வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் குறித்த நிரல் அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- உயர்கல்வித் துறை தொடர்பான 13 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டமை.

- உயர் கல்வித் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து அவற்றில் பங்கேற்றமை.

- பல்வேறு தரப்பினரால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அறிக்கைகள் / ஆவணங்கள்/ திட்டங்களுக்கு கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளை வழங்கியமை.

- மனித வள அபிவிருத்தி தொடர்பான பல்வேறு பங்குதாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் / பயிற்சி வேலைத் திட்டங்கள் என்பவற்றில் பங்கேற்றமை.

**திறன் கல்வி**

நாட்டில் தற்போதுள்ள தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (TVET) விநியோக வலையமைப்பைக் கருத்திற் கொண்டு, அரச, தனியார், தொண்டு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்ட சுமார் 1,500 தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் தற்போது நாடு முழுவதும் இயங்கி வருகின்றன. இம் மூன்று வகையான நிறுவனங்களில் அரச துறை தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்துகிறது. மூன்றாம் நிலை கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC), தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சியை ஒழுங்குபடுத்துவதற்காக நியமிக்கப்பட்ட உயர்ந்த அமைப்பாக செயற்படுத்தப்படுவதுடன் நாட்டினுள் இத்துறையின் பூரணமான ஒழுங்குமுறையில் பங்கேற்கிறது. இதன்பிரகாரம், வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள், கிராமப்புற பெண்கள், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியோர், மற்றும் அரை திறன் அல்லது திறனற்ற தொழிலாளர்கள் என்போரை மையப்படுத்தி வருடாந்தம் 100,000 இற்கு அதிகமானோர் அனுமதிக்கப்படுகின்ற 7,000 பதிவு செய்யப்பட்ட பாடநெறிகள் மற்றும் 3,000 அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள் தற்பொழுது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகின்றன.

இலங்கை போன்ற விருத்தியடைகின்ற பொருளாதாரங்களில் இளைஞர் யுவதிகள் கைத்தொழிற் துறையில் ஈடுபடுவதற்கு, திறன் இடைவெளிகளை நிரப்புவதற்கான திறன்களைப் பெறுவதற்கும் ஒரு நல்ல தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி அமைப்பு காணப்படல் வேண்டும். இதன் பிரகாரம், நாட்டின் தேசிய, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திச் செயல்பாட்டில் மிகவும் திறமையான மற்றும் திறனான வேலையாட்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் இனங்கண்டுள்ளதுடன், முன்மொழியப்பட்ட தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பின் (NEPF) கீழ் தொழிற்கல்வி துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**திறன் கல்வித் துறையில் தற்போது செயற்படுத்தப்படுகின்ற முக்கியமான கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்**

- TVET கருத் திட்டம் (இலங்கை அரசு / KOICA)
- கொழும்பு தொழிற்பயிற்சி மத்திய நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவுதல் (இலங்கை அரசு / EDCF)
- நியாகம தொழிற்பயிற்சி மையத்தை வலுப்படுத்துதல் (இலங்கை அரசு / KOREA)
- இலங்கையில் உள்ள 7 தொழில்நுட்ப தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் நவீனமயமாக்கல் (இலங்கை அரசாங்கம் / ஜெர்மனி)
- Youleed கருத்திட்டம் (இலங்கை அரசாங்கம் /USAID)
- ‘‘நிபுனதா சிசு திரிய’’ சமூக நல வேலைத்திட்டம்

**2023 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- முறையான விதத்தில் நியாயப்படுத்தப்பட்ட 05 மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் / வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டமை.
- திறன் கல்வித் துறை தொடர்பான 02 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் தயாரிக்கப்பட்டமை.
- திறன் கல்வித் துறை தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டமை.
- பல்வேறு தரப்பினரால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அறிக்கைகள்/ஆவணங்கள்/திட்டங்களுக்கான கருத்துக்கள் / அவதானிப்புக்கள் வழங்கப்பட்டமை.

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் வலுவூட்டப்பட்ட இலங்கையை நோக்கிய பயணத்தில், அனைத்தையும் உள்ளடக்கிய, புதுமையான மற்றும் நிலையான அபிவிருத்தி, மனிதனை மையமாகக் கொண்ட மற்றும் மனித உரிமைகள் அடிப்படையிலான கொள்கைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளது. பொருளாதார துறைகளை டிஜிட்டல் மயமாக்குவது விரைவான பொருளாதார மீட்சிக்கு துணைபுரிவதுடன் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை சரியான நேரத்தில் அடைவதை உறுதி செய்யும்.

இதன் பிரகாரம், இணைப்பு மற்றும் அணுகல், தகவல் தொழில்நுட்ப கல்வியறிவு, அரசாங்க விவகாரங்களை டிஜிட்டல் மயமாக்குதல், பாதுகாப்பு, டிஜிட்டல் நிதி மற்றும் பொருளாதார துறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற 6 கருப்பொருள் தூண்கள் மூலம் பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி மாற்ற அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அம்முயற்சி தனியார் முதலீடுகள் மூலம் ஊக்குவிக்கப்படும்.

**செயற்பாடுகள்**

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 10 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பல கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நிகழ்த்தப்பட்டன.

**விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D), புத்தாக்கம், தொழில்நுட்ப முன்னேற்றம் என்பன பொருளாதாரத்தின் பொருளாதார அபிவிருத்தியை பன்மடங்கு அதிகரிப்புக்கு வழிவகுக்கும் முக்கிய அளவுகோல்களாகும். இந்த அளவுகோல்களினூடாக ஊழியப்படையின் உற்பத்தித்திறனை விருத்திசெய்வதனூடாக அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு நாட்டிற்கு இயலுமாக காணப்படுகிறது. தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, அறிவு உருவாக்கம், உற்பத்தித்திறன் மேம்பாடு போன்றவை பொருளாதார மந்தநிலை மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய பிரச்சனைகளுக்கு தீர்வுகளை அடைவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளாகக் காணப்படுகிறது.

**செயற்பாடுகள்**

- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 2 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பல கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நிகழ்த்தப்பட்டன.

**சுகாதாரம்**

2023 ஆம் ஆண்டில், சுகாதாரத் துறைக்காக, அரசாங்கத்தின் நோக்கமாக அமைவது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் போது சாதாரண மக்களுக்கு தொடர்ச்சியான சுகாதார சேவையை வழங்குவதற்காக மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கிடைப்பதை உறுதி செய்வதாகும். அபிவிருத்திப் பங்காளிகளின் பங்களிப்புடன் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம், தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் நிரல் அமைச்சுக்கள் மூலம் வசதியளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அத்தியாவசிய மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள், இரசாயன ஆய்வுகூட உபகரணங்களை விநியோகிப்பதற்கு விேடமாக இந்திய கடன் வசதி வேலைத்திட்டம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அபிவிருத்தி பங்காளிகளினூடாக சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய சுகாதார உதவி வழங்குநர்களுடன் இணைந்து தேசிய திட்டமிடல் திணைக்களம் பாரிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. மேலும், சுகாதாரத் துறைக்கு, விேடமாக மருந்துப்பொருள் விநியோகம் மற்றும் அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அரசாங்கத்தால் சுகாதாரத் துறையில் மூலதன முதலீடாக அரசாங்கம் 55,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியதுடன், இது ஆண்டின் இறுதியில் 62,687 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. நிரல் அமைச்சினூடாக வழங்கப்பட்ட இந் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக முதனிலை சுகாதார நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஆணைக்குழு ஊடாக மாகாண சபைகளுக்கு13,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மேற்கூறிய செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, அமைச்சரவையின் வழிகாட்டுதலின் பிரகாரம், "சுகாதார அமைச்சு தொடர்பான அரசாங்க செலவினங்களை பகுத்தறிவுபடுத்துவதற்கான பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழு" அறிக்கையைத் தயாரிப்பதற்கு இத் திணைக்களம் தனது பங்களிப்பை வழங்கியது. இவ் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

**செயற்பாடுகள்**

- 11 கருத் திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, செயற்படுத்துவதற்காகப் பரிந்துரைகளை வழங்கியது. இது தொடர்பான அவதானிப்புகள் குறித்த நிரல்

அமைச்சு, தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 08 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- சுகாதாரத் துறை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை முன்மொழிவொன்றுக்கு நிதி அமைச்சு சார்பில் அவதானிப்பு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- சுகாதாரத் துறைக்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தும் நோக்குடன் முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களை கருத்திற் கொண்டு கருத்திட்ட வரிசை புதுப்பிக்கப்பட்டது.
- சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய வெளிநாட்டு உதவி வழங்கும் கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டு தொடர்புடைய பொருத்தமான அவதானிப்புகள் உலக சுகாதார தாபனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன.

**விளையாட்டு**

திறமையான, ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான மனித வளத்தை உருவாக்க சமுதாயத்தில் விளையாட்டு கலாச்சாரத்தை ஏற்படுத்துவதே விளையாட்டு துறையின் முக்கிய நோக்கமாகும். இதில், பாடசாலை மட்டத்திலிருந்தே பிள்ளைகளை விளையாட்டுத்திறனுக்கு பழக்கப்படுத்தி, விஷேட விளையாட்டு திறன் கொண்ட பிள்ளைகளை கண்டறிந்து, அவர்களை சர்வதேச அளவில் பரிந்துரைத்தல், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் திறன் மேம்பாட்டுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் என்பன எதிர்ப்பார்க்கப்படுகிறது.

விளையாட்டுப் பிரிவு, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து கொள்கை உருவாக்கத்திற்குப் பங்களிப்பு வழங்குதல், கருத்திட்ட மதிப்பீடு, அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் சமர்ப்பித்தல் மற்றும் தேசிய / துறை அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பிடல் என்பனவற்றிற்கு பூரணமான பங்களிப்பை தேசிய திட்டமிடல் திணைக்களம் வழங்குகிறது. அதன் பிரகாரம், விளையாட்டுத் துறை 2023 ஆம் ஆண்டினுள் 03 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேவையான பரிந்துரைகளை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பனவற்றுக்குச் சமர்ப்பித்தது. மேலும் நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் சார்பாக அவதானிப்புகள் வழங்கப்பட்டன.

## 2.2. விவசாயம்

**விவசாயம்**

நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் ஒன்றிலும் அதிகமானோரின் பிரதான வாழ்வாதாரமாக காணப்படுகின்ற விவசாயத் துறையானது, தேசிய மற்றும் வீட்டு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு பங்களிப்பதுடன், பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுடன் செங்குத்து மற்றும் கிடைமட்ட ஒருங்கிணைப்பினூடாக நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில், அண்ணளவாக 40% ஆன காணிகள் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதுடன், இதில் அண்ணளவாக 65% (1.9 மில்லியன் ஹெக்டேர்) ஆன நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. பயிரிடப்பட்ட

பயிர்களில், நெல் மற்றும் பெருந்தோட்டப் பயிர்கள் (முக்கியமாக தேயிலை, ரப்பர் மற்றும் தென்னை) பயிர்ச்செய்கைப் பரப்பில் 36% ஆகக் காணப்படுகிறது. விவசாயத் துறையின் முதன்மை உற்பத்தி கிட்டிய தசாப்தங்களில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) 7 - 8% ஆகக் காணப்படுகிறது. விவசாயத் துறையின் ஏற்றுமதி வருவாய் சுமார் 2,500 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ஆண்டு அறிக்கை, CBSL - 2022) இது நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் கிட்டத்தட்ட 19.6% ஆகும்.

விவசாயத் துறையானது உலகாலவிய ரீதியில் முக்கியமான வளர்ந்து வரும் மற்றும் வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஏற்றுமதி வருமானத்தினூடாக உணவு மற்றும் போசனைப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்திற்கு முன்னணியான பங்களிப்பை வழங்குகிறது. விவசாய உற்பத்தி புவியியல் ரீதியாக சமமாக பரவவில்லை. இங்கு, உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும், உற்பத்தி நிபுணத்துவம், உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் நிலம் ஒரு தீர்க்கமான காரணியாகப் காணப்படுவதுடன், அதன் பிரகாரம், விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத் துறையை நவீனமயமாக்குவது குறிப்பிடத்தக்க நிலையான அபிவிருத்தியை உருவாக்குவதற்கான ஒரு பதிலீடாக மாறியுள்ளது.

விவசாயக் கொள்கையின் இரண்டு பிரதான பிரிவுகளாக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தியை அடைவதாகும். அதற்காக அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு, இயற்கை வளங்களின் நிலையான முகாமைத்துவத்தினால் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய, புதுமையான மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட வணிக விவசாய உற்பத்தி, செயலாக்கம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**உணவுப் பயிர் விவசாயம்**

உணவுப் பயிர் விவசாயத்தினூடாக மக்களின் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. தொற்றுநோய்கள், பாதகமான காலநிலை மற்றும் உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தினால் விநியோகச் சங்கிலியின் பாதிப்பின் காரணமாக உலகளாவிய உணவு நெருக்கடியின் தாக்கம் இது வரையில், பல்வேறு அரசாங்க தலையீடுகள் மற்றும் விவசாயத் துறையில் சீர்திருத்தங்கள் மூலம் உள்ளூர் உணவு சந்தைக்குள் நுழைவது குறைக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க விவசாயிகள் / உற்பத்தியாளர்களுக்கு சலுகைக் கடன்கள் மற்றும் நிதிச் சலுகைகள் வழங்கப்பட்டன. மேலும், தனியார் துறையிலும் பங்கேற்பு சந்தையிலும் போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு, உணவு மற்றும் மதிப்புச் சங்கிலியின் செயல்திறனை அதிகரித்து எதிர்கால தொழில்முனைவோருக்கு சலுகைக் கடன்கள் மற்றும் பொருந்தக்கூடிய மானிய வசதிகளும் வழங்கப்பட்டன.

உள்நாட்டு விவசாயத் துறையை நவீன, பசுமை விவசாயத் துறையாக மாற்றுவதன் மூலம் அத்துறையின் அபிவிருத்தியை மீட்டெடுப்பதற்கு விவேகமான அரசாங்க தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக வாழ்வாதார அளவிலான சிறு விவசாய அலகுகளைக் கொண்ட வீட்டு விவசாயத் துறையில் கட்டமைப்பு மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அதன் பிரகாரம், விவசாயப் பொருட்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை நிர்வகித்தல், மதிப்புச் சங்கிலி மற்றும் போட்டித்தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் கருத்திட்டச் சேவைகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. விவசாயத்திற்கான அரசாங்க செலவினங்களை முறையாக மறுபரிசீலனை செய்வதற்காக அமைச்சரவையினால் பொதுச் செலவின மறுஆய்வுக் குழு (PERC) நியமிக்கப்பட்டுள்ளதுடன் நிலையான முறையில் வருமானமீட்டலை அதிகரிப்பதுடன் செலவினங்களைக் குறைத்து செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை

மேம்படுத்துவதற்கான முறைமைகளைப் பரிந்துரைத்துள்ளது. அதன் பிரகாரம், விவசாயத் துறையில் அரச செலவினங்கள் மேற்கூறிய குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அத்துறையின் நிதி மற்றும் பிற வளங்களின் திறனான முகாமைத்துவம் மற்றும் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம், மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கான பொது முதலீடுகள், பிரதானமாக விவசாயத் துறையை நவீனமயமாக்குதல், உள்நாட்டு நுகர்விற்காக மற்றும் ஏற்றுமதிக்கான உயர்தர விவசாய உற்பத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்தல், மதிப்புக் கூட்டலை பிரபலப்படுத்துவதற்கான பங்களிப்பு மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் என்பன முன்னுரிமைப் பணிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயப் பிரிவினால் பூரணப்படுத்தப்பட்ட பணிகள்**

- 16 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

- விவசாய அமைச்சு மற்றும் அது சம்பந்தமான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 07 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அமைச்சரவை அவதானிப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கருத்துக்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**விசேட செயற்பாடுகள்**

- ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரையின் பிரகாரம் ‘‘Modernization of Agriculture’’ என்ற தலைப்பில் ஒரு கருத்திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

- ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் அறிவுறுத்தலின் பிரகாரம் ‘‘Paddy Stock and Forecast’’ பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

- "Food System Transformation and Rural Recovery” என்ற தலைப்பில் ஒரு கருத்திட்டக் கருத்துருவைத் தயாரித்து, KOICA நிதி மானியங்களைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

- ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘‘Food Security Policy Framework’’ தொடர்பான பங்குதாரர் கூட்டங்களில் பங்கேற்றமை.

- ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (HARTI) நடத்திய ஆராய்ச்சி மன்றத்தில் பங்கேற்று தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியமை.

- ஜனாதிபதி செயலகத்தின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் குழுவின் கூட்டங்களில் பங்கேற்று தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியமை.

- Sri Lanka Institute of Agriculture நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாய மாநாட்டில் வளவாளராகப் பங்கேற்று பங்களிப்பு வழங்கியமை.

- ஜனாதிபதி செயலகத்தால் விவசாயத் துறையின் நிறுவன மதிப்பாய்வுக்காக நியமிக்கப்பட்ட குழுக் கூட்டங்களில் பங்கேற்றமை.

- தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான Aide Memoire க்கான அவதானிப்புக்களை வழங்குதல்.

- தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல்.

**கால்நடைகள்**

கால்நடைத் துறையானது, குறிப்பாக நாட்டின் கிராமப்புறங்களில் சுமார் 1.6 மில்லியன் மக்கள்தொகைக்கு ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய துணைத் துறையாகும். மொத்த தேசிய உற்பத்தியில் 1% க்கும் குறைவான பங்களிப்பை வழங்கினாலும், இத்துறைக்கான தொழிலாளர் தேவையின் காரணமாக, கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பயன்படக்கூடிய பிரதானமான துறைகளில் இதுவும் ஒன்றாகும். இத்துறை பிரதானமாக கால்நடைகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் மற்றும் பன்றிகளை வளர்ப்பதை உள்ளடக்கியது. இவற்றில், பால் மற்றும் கோழி வளர்ப்பு அபிவிருத்தியின் முக்கிய பகுதிகளாகும். நாட்டில் சுமார் 600,000 பதிவுசெய்யப்பட்ட கால்நடை பண்ணைகள் காணப்படுவதுடன், அவற்றில் 80மூ க்கும் அதிகமானவை, திறமையற்ற தொழிலாளர்களை பயன்படுத்தி, கைவிடப்பட்ட அல்லது குறு நிலத்தில் செயற்படுகின்றன. நாட்டில் பதிவு செய்யப்பட்ட சுமார் 600,000 விலங்குப் பண்ணைகள் காணப்படுகின்றன. மேலும் 250,000 பால் பண்ணையாளர்கள் உட்பட சுமார் 600,000 குடும்ப அலகுகள் நேரடியாக இத்துறையில் ஈடுபட்டுள்ளன. நாட்டில் பதிவுசெய்யப்பட்ட கால்நடைப் பண்ணைகளில் 80% க்கும் அதிகமானவை, திறமையற்ற தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தி, பயன்படுத்தப்படாத அல்லது குறு நிலத்தில் இயங்குகின்றன.

பால் உற்பத்தித் துறையானது பண்ணை உற்பத்தியில் பிரதான உப பிரிவாகக் கணப்படுகிறது. பால் நுகர்வுக்கான சுகாதார அமைச்சின் உணவை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம், வயது வந்தவர் ஒருவரின் நாளாந்த போசனைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 150 மில்லி பால்/பால் உற்பத்திப் பொருட்கள் உட்கொள்ள வேண்டும். எனினும், உள்நாட்டு உற்பத்தியின் அளவிற்கு அமைவாக, கேள்வியில் 50% தேவை மாத்திரமே உள்நாட்டால் பூர்த்தி செய்யப்படுகிறது. எஞ்சியவை இறக்குமதி செய்யப்பட்ட பால் மற்றும் பால் பொருட்கள் மூலம் விநியோகிக்கப்படுவதுடன், இதற்கு வருடாந்தம் அண்ணளவாக 50 பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.

கோழிப்பண்ணை தொழில் முற்றிலும் தனியார் தரப்பினரால் இயக்கப்படுகிறது. சிறிய அளவிலான கோழி உற்பத்தியாளர்களுடன் உள்ளீடுகள் மற்றும் வர்த்தகத்திற்கான முன்னோக்கி ஒப்பந்தங்களை (Forward Contracts) மேற்கொள்வதன் மூலம். அரசின் தலையீடு, கோழிப்பண்ணை சுகாதார முகாமைத்துவம், ஆராய்ச்சி மற்றும் கோழிப் பொருட்களின் தரத்தை உறுதி செய்தல் ஆகிய துறைகளிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. இத் துறையானது உள்நாட்டு நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளதுடன், தற்போது முட்டைக்காக நாட்டில் 20,896 பண்ணைகளும், இறைச்சிக்காக 10,490 பண்ணைகளும், 222,943 வீட்டு கோழிப் பண்ணைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கால்நடைத் துறையில் அரசாங்கக் கொள்கையாக அமைவது இயற்கையான சுற்றாடல் அமைப்புகளின் நிலையான தன்மையை உறுதிசெய்து, உள்நாட்டு வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதுடன் விலங்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தலையீடுகள் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்குத் திறனான விதத்தில் பங்களிப்பை வழங்குவதாகும். அதன் பிரகாரம், கால்நடை வளர்ப்பு, கால்நடை சுகாதார முகாமைத்துவம் மற்றும் கால்நடை உற்பத்தித் துறையின் அபிவிருத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகியவற்றில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடுகிறது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கால்நடைகள் பிரிவினால் பூரணப்படுத்தப்பட்ட பணிகள்:

- 02 கருத் திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

- கால்நடைத் துறை தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்றுக்கு அமைச்சரவை அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களின் வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல்.

**காணி மற்றும் நீர்ப்பாசனம்**

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், புதிய நீர் மூலங்களை விருத்தி செய்வதற்கும், இருக்கும் நீர் மூலங்களை விருத்தி செய்வதுடன், பொருத்தமான, நியாயமான நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்கும் நீர்ப்பாசனத் துறை இன்றியமையாதது. நீர்வள அபிவிருத்தியின் கீழ், மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், உமாஓயா நீர் திசை திருப்பும் கருத்திட்டம் போன்ற பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்களின் இறுதிக் கட்ட வேலைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை, புதிய கருத்திட்டங்கள் விவசாயம் மற்றும் ஏனைய நீர்த்தேவைகளுக்கு நீர் வழங்குவதற்காக பல புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் கீழ் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டம், மல்வத்து ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம், தல்பிட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம், ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம், காலநிலை தாக்கத்தை குறைக்கும் பல்நோக்கு வேலைத்திட்டம் போன்ற கருத்திட்டங்கள் பிரதானமானவையாகும். எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய நிதி நிலைமையுடன், இந்த வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான வழிமுறைகள் தேவையான பதிலீடுகளுடன் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் நேரடி பங்களிப்பின் காரணமாக நுடடயபெய அபிவிருத்தி மூலம் நீர் வள அபிவிருத்தி ஒரு முக்கிய தலையீடாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும், தண்ணீர் வீணாவதை தடுப்பதற்கு நீர் போக்குவரத்து அமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் தேவையான புனர்நிர்மான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதர்களுக்கு மற்றும் பயிர்களுக்கு நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நிலத்தடி நீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகியன தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**காணி வளம்**

பயன்படுத்தப்படாத மற்றும் கைவிடப்பட்ட நிலத்தை திறனான பயன்பாட்டிற்கு மாற்றுதல் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான அடிப்படைத் தேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நில வளங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் போட்டித்திறன் மற்றும் வருமானத்தை அதிகரிப்பதில் முக்கியமான காரணியாகும். எனவே சிறந்த பதிலீடாக நிலத்தைப் பயன்படுத்தல் ஏனைய உள்ளீட்டுத் தேவைகளுடன் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகிறது. நில வங்கியின் அணுகல் பிரதானமாக முதலீடு மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கருத்து முன்னணி நிறுவனமான காணி அமைச்சினால் கருத்திற்கொண்டு, தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களாலும் பங்களிப்பு வழங்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, ”பிம்சவிய” வேலைத்திட்டம் கடந்த சில ஆண்டுகளாக செயற்படுத்தப்படுவதுடன் நில பயன்பாடு மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு மிகவும் பலமான மற்றும் சட்டரீதியான நிலத்தை வழங்குவதற்காக, நில உரிமை அல்லது எல்லைகள் தொடர்பான தேவையற்ற

சர்ச்சைகளைத் தவிர்ப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது. தேவையான நிர்வாக மற்றும் சட்டத் திருத்தங்களுடன் நிலம் கையகப்படுத்தும் செயன்முறை விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா மற்றும் நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களுடன் இணைந்து சுமூகமாக கொள்கை உருவாக்கத்திற்கான பங்களிப்பை வழங்கியமை, கருத்திட்ட மதிப்பீடு மற்றும் அவதானிப்புகளை வழங்கியமை அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்களை வழங்குதல் இத் துறையின் (Agricultur Cluster) பிரதான செயற்பாடுகளாகும்.

**பிரதானமான செயற்பாடுகள்**

- காணி மற்றும் நீர்ப்பாசனத் துறைகள் தொடர்பான 7 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பனவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 24 அமைச்சரவைப் பத்திரங்களிற்கு அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டம், ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம், காலநிலைத் தாக்கத்தைத் குறைப்பதற்கான பல நோக்கு வேலைத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ அணுகளினூடாக இலங்கையின் உலர் வலயத்தில் காலநிலை மாற்றத்தைச் சிறு காணி உரிமை கொண்ட விவசாயிகளின் தாங்கும் திறனை விருத்தி செய்வதற்கான கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களில் வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல்.
- தற்பொழுது நடைமுறையிலுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கொள்கை ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்றல்.
- தற்பொழுது நடைமுறையிலுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் தொடர்பான யுனைந ஆநஅழசைந க்கான அவதானிப்புகளை வழங்குதல்.
- தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**பெருந்தோட்டம்**

இலங்கைப் பொருளாதாரத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை தனித்துவமான பங்கினை வகிக்கின்றது. தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை பிரதான பெருந்தோட்டப் பயிர்களாவதுடன், மிளகு, கருவாப்பட்டை, கராம்பு, வெற்றிலை, கரும்பு, சோளம் மற்றும் மஞ்சள் ஆகியவை சிறு தோட்டப் பயிர்களாகும். பெருந்தோட்டத்துறையானது நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 27 சதவீத பங்களிப்பை வழங்குவதுடன், சுமார் 1.5 மில்லியன் மக்கள் பெருந்தோட்டத்துறையில் இருந்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டுகின்றனர். உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பயிர்களை பல்வகைப்படுத்துவதற்கும், பெருந்தோட்டத் துறையில் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் முன்னுரிமை வழங்குவதற்கு 2023 ஆம் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பெருந்தோட்டத்துறைக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் -

- 28 கருத்திட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்து அவற்றில் 06 கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடும் பொதுச் செலவு எல்லை குறித்த சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு புதிய கருத்திட்டங்களுக்கு பின்னர் ஒப்புதல்

அளித்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் அவசர மற்றும் முன்னுரிமை கருத்திட்டங்களுக்கு மாத்திரமே மேற்கண்ட ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

- 04 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டமை.

**விசேட செயற்பாடுகள்**

- பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் துஜஊயு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.

- விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டத்தின் தேசிய அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

- சிறு தோட்ட உரிமையாளர்களிற்கு (தேயிலை / இறப்பர்) புத்துயிர் (STaRR) கருத்திட்டம் மற்றும் விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டத்தின் தேசிய வழிகாட்டுதல் குழுக் கூட்டங்களில் பங்கேற்றமை.

- இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டல் வரைபடத்தை தயாரிப்பதற்கான பங்களிப்பை வழங்குதல்.

- கருவாப்பட்டை அபிவிருத்தி திணைக்களத்தின் வழிகாட்டல் வரைபடத்தை தயாரிப்பதற்கான பங்களிப்பை வழங்குதல்.

**மீன்பிடி**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்தக்கூடிய பாரிய நீர்வளங்கள் மற்றும் தொடர்புடைய வாய்ப்புகள் இலங்கையில் உள்ளன. மீன்பிடித் துறை சுமார் 2.8 மில்லியன் மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்பிடித் துறையின் பங்களிப்பு சுமார் 1.1 சதவீதமாக உள்ளது. இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் கட்டமைப்பிற்குள், மீன்பிடி உற்பத்திகள் தன்னிறைவு மூலம் உணவுப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி நிலைமைகளை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன்பிரகாரம், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் நங்கூரங்களை விருத்தி செய்தல், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், நன்னீர் மீன்பிடியை விருத்தி செய்தல், மீன்வளர்ப்பு உற்பத்தியை அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் மீனவ சமூகத்தை மேம்படுத்தல் ஆகிய பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மீன்பிடித் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் -**

- 11 கருத்திட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்து அவதானிப்புகளை வழங்கியமை.

- 01 அமைச்சரவை பத்திரத்திற்கான அவதானிப்பை அமைச்சரவைக்கு வழங்கி 02 அமைச்சரவை பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை குறித்த திணைக்களங்களுக்கு வழங்கியமை.

**விசேட செயற்பாடுகள்**

- மீன்பிடி அமைச்சின் அதிகாரிகளுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் JICA நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்.

- ஜனாதிபதி செயலகத்தின் ஒருங்கிணைப்பில் நிறுவப்பட்ட உயர்ந்த தாக்குத்திறன் கொண்ட மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதற்கான நிபுணர் குழுவில் பங்கேற்றமை.

## 2.3. கைத்தொழில், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா

### கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான கைத்தொழில் உற்பத்திகள் இலங்கையின் உற்பத்திப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30% பங்களிப்பை கைத்தொழில் துறையால் வழங்கப்படுவதுடன் ஏற்றுமதி வருமானத்தில் 80% கைத்தொழில்துறை ஏற்றுமதியில் இருந்து பெறப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் இலங்கையின் கொடுப்பனவு சமநிலையின் இரண்டு முக்கிய கூறுகளாக இருப்பதாலும், இலங்கையின் குடும்பத்தின் கலோரி உட்கொள்ளலில் சுமார் 22% இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் இருந்து பெறப்படுவதாலும், வர்த்தகத் துறை கொள்கைகள் மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் உள்நாட்டு நுகர்வோர் நலனை உறுதி செய்வது மாத்திரமன்றி நாட்டில் வெளிநாட்டு இருப்புக்களின் நிலையான நிர்வாகத்தையம் பாதிக்கிறது. அத்துடன், தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கைப் பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வதற்கு சவாலான நிலைமையை எதிர்கொண்டுள்ள பின்னணியில், அரசாங்கத்தின் முன்னுரிமையானது நிலையான வெளிநாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம், சமூக மற்றும் கைத்தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் ஊடாக இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஊடாக தேவையான முதலீடுகளை பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

இத் துறையானது வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கையுடன் தொடர்புடையது. அதன்பிரகாரம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பிற்கான சூழலை உருவாக்குவதற்கு, தேசிய கொள்கை இலக்குகள் மற்றும் SDG இலக்குகளை அடையும் நோக்கில் 2023 இல் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

- 30 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- 10 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 02 கொள்கைப் பத்திரங்களை மதிப்பாய்வு செய்து, குறித்த தரப்பினருக்கு கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- 02 வெளிநாட்டுப் பணிகளுக்கு உதவி, முன்மொழிவுகள் பற்றிய கருத்துகள், உள்ளீடுகள் மற்றும் அவதானிப்புக்கள் வழங்கியமை.

**சுற்றுலா**

சுற்றுலாத்துறையானது இலங்கையின் பொருளாதாரத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒரு முக்கியமான துறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், “2048 ஆம் ஆண்டளவில் முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடு” என்ற தொலைநோக்குப் பார்வையுடன் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் இனங்காணப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை இயற்கைச் சூழல் மற்றும் இயற்கை அழகை அடிப்படையாகக் கொண்டு, உள்ளூர் கலாசாரத்திற்கு உகந்த ஒரு தொழிலாக பரந்த பொதுமக்கள் பங்கேற்புடன் விருத்தி செய்வது அரசின் கொள்கையாகும். அதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தெளிவான அபிவிருத்தியை ஏற்படுத்துவதன்

மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கையை தெற்காசிய வலயத்தில் ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்குச் சுற்றுலா அமைச்சு, அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திணைக்களத்தின் சுற்றுலாத் துறையானது, சுற்றுலா மற்றும் காணி அமைச்சுடன் இணைந்து, கொள்கை உருவாக்கம், கருத்திட்ட மதிப்பீடு, அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்களை வழங்கல் மற்றும் தேசிய/துறை அபிவிருத்தித் திட்டங்களின் மதிப்பீடு என்பவற்றிற்கான பங்களிப்பை வழங்கியது. அதன்பிரகாரம், சுற்றுலாத் துறை 2023 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை நிறைவு செய்தது.

- சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 08 அமைச்சரவைப் பத்திரங்களுக்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் சார்பாக அவதானிப்புகள் வழங்கப்பட்டன.
- 02 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- தேசிய சுற்றுலாக் கொள்கை வரைவு குறித்து கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் வழங்கப்பட்டன.
- பின்னவல - கித்துல்கல சுற்றுலா வழித்தடத்தை அபிவிருத்தி செய்வதற்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டது.
- முன்மொழியப்பட்ட சுற்றுலாத் துறை விருத்தி மற்றும் ஆலோசனை ஆசிய அபிவிருத்தி வங்கி பணிக்கான (ADB) ஒரு தொடக்கக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

## 2.4. வணிக உட்கட்டமைப்பு

**போக்குவரத்து, வீதிகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள்**

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், நாட்டின் தற்போதைய நிதி மற்றும் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், அங்கு புதிய வீதிகளை அமைப்பதை விட தற்போதுள்ள வீதி அமைப்பைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், நவீனமயமாக்கல் மூலம் பொதுப் போக்குவரத்தை விருத்தி செய்தல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், வீதி விபத்துகளைக் குறைத்தல், சுற்றாடலுக்கு உகந்த மின்சாரப் போக்குவரத்தை பிரபலப்படுத்துதல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை விருத்தி செய்தல் போன்ற கருத்திட்டங்கள் வெற்றிகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.

**விசேட செயற்பாடுகள்**

- குறித்த நிரல் அமைச்சுக்களால் முன்வைக்கப்பட்ட 09 புதிய கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் மதிப்பீடு.
- போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு அல்லது இந்தத் துறைகள் தொடர்பான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் கொள்கைப் பத்திரங்கள் மீதான 75 அவதானிப்புகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டமை.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதில் குறித்த நிரல் அமைச்சுக்களுக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியமை.

- இலங்கை தேசிய கடல்சார் கொள்கை மற்றும் இலங்கை நிலையான விமான போக்குவரத்துச் சுற்றாடல் கொள்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை நிரல் அமைச்சிற்கு வழங்கியமை.

- பின்வரும் குழுக்களின் உறுப்பினராகச் செயல்படுதல்

  – இலங்கையின் தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கையைத் தயாரித்தல்

  – இலங்கையில் மின்சார வாகனங்களை அறிமுகப்படுத்துவதற்கான பின்னணியை அமைப்பதற்கு e -mobility கொள்கையைத் தயாரித்தல்

  – கருத்திட்ட வழிகாட்டல் குழுக்கள்

  – பொது முதலீட்டுத் திட்டத்திற்குத் தேவையான தகவல்கள்,திணைக்களத்தால் அவ்வப்போது தயாரிக்கப்பட்ட ஏனைய அறிக்கைகளிற்கு தேவையான தரவுகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல்.

  - வெளிநாட்டு உதவி பணி குறிப்புகளுக்கு அவதானிப்புகள் வழங்கியமை

**மின்சக்தி மற்றும் வலுசக்தி**

மின்சாரம் மற்றும் வலுசக்தித் துறையானது மின்சாரம் மற்றும் பெட்ரோலியத் தொழிற் துறையைக் குறிக்கிறது. 2022 ல் கனிய எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதிக்கு ரூ. 1,451 பில்லியன் செலவிடப்பட்டது. நாட்டில் தற்போதைய மொத்த மின் உற்பத்தி மற்றும் நிறுவப்பட்ட கொள்ளளவு முறையே 15,942 GWh மற்றும் 4,084 MW ஆகும். இலங்கையின் தனிநபர் மின்சார பாவனை 655 kW/h ஆகக் காணப்படுவதுடன், நாட்டின் வருடாந்த மின்சார கேள்வி 5.5% வீதத்தால் அதிகரித்து வருகின்றது.

தேசிய கொள்கை கட்டமைப்பின் பிரகாரம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களிலிருந்து மின் உற்பத்தி செய்வது ஊக்குவிக்கப்படுவதுடன் மின் உற்பத்திக் கலவையில் அதை ஒருங்கிணைப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் நாட்டின் தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு அமைவாக, மின் உற்பத்திக் கலவையில் புதுப்பிக்கப்படத்தக்க சக்தியை சேர்ப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இது நாட்டிற்கு மலிவு, குறைந்த விலை மற்றும் நம்பகமான உத்திகள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனவே, மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையில் அதிகரித்து வரும் கேள்வியை பூர்த்தி செய்வதற்காக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கை அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன்பிரகாரம், இத்துறை சார்ந்த 2023 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்களிப்பு பின்வருமாறு.

- தேசிய திட்டமிடல் திணைக்களம் 21 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பிட்டு அவதானிப்புகளை வழங்கியது.

- 12 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மற்றும் வலுசக்தி போன்ற முதலீட்டு முன்மொழிவுகளிற்கான அவதானிப்புக்கள் மற்றும் கருத்துகள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டுப் பணிக்குழு தொடர்பான விடயங்கள் மீதான அவதானிப்புக்கள் வழங்கபட்டன.

- தொடர்புடைய நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்கூரை சோலார் பேனல்களின் (Rooftop Solar PV System) அபாயங்களை பகுப்பாய்வு செய்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் முன்முயற்சியின் பேரில், இலங்கையின் மின்கல சக்தி சேமிப்பு அமைப்புகளை (Battery Energy Storage System) மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று நிறுவப்பட்டது. அதன்பிரகாரம் கடந்த ஆண்டு 3 தொழில்நுட்ப உபகுழுக்கள் நிறுவப்பட்டு 3 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**குடிநீர் மற்றும் கழிவகற்றல்**

குடிநீர் மற்றும் கழிவகற்றல் துறைக்கான தேசியக் கொள்கைக் கட்டமைப்பினூடாக, நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் துறையின் கீழ் சேவை வழங்கல், விருத்தி செய்தல், நீர் வழங்கல் கவரேஜ் வலயங்களை விருத்தி செய்வதன் மூலம் நாட்டில் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை நிறுவுவதில் கவனம் செலுத்தப்படுகிறது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஆரம்பப் பரிந்துரையுடன், 2023 ஆம் ஆண்டில் பல்வேறு அளவிலான குடிநீர் மற்றும் கழிவகற்றல் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட ஏழு (07) கருத்திட்டங்கள் எதிர்கால நடைமுறைக்கு பரிந்துரைக்கப்பட்டன. மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் துறையிலுள்ள பல்வகை பிரச்சினைகள் தொடர்பான 25 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள், கருத்துக்கள் மற்றும் குறிப்புகள் வடிவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நீர் மற்றும் கழிவகற்றல் துறையில் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. மேலும், 2023ல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நீர்வள முகாமைத்துவக் கொள்கையை பூர்த்தி செய்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் முழுமையான ஆதரவை வழங்கியது. நுகர்வோர் இணைப்புக்கான புதிய வழிகாட்டி, கொள்கை சீர்திருத்தப் பகுதிகள் தொடர்பான குடிநீர்க் கொள்கை மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டக் கொள்கை போன்ற நீர் மற்றும் கழிவகற்றல் துறையின் பணிகளுக்கு விசேட அறிவை வழங்குவதன் மூலம் பங்களித்தது.

**வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை**

நகர அபிவிருத்தி ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதாக அமைவதுடன் அது ஒரு நாட்டின் செழிப்பைக் காட்டும் முக்கிய காரணியாகும். நகர்ப்புறங்களில் அபிவிருத்திகளை மேம்படுத்த அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. குறைந்த வருமானம் உள்ள வீடுகள் மற்றும் நடுத்தர வருமானம் உள்ள வீடுகள் என்பனவற்றை இலக்காகக் கொண்டு வீட்டுக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய நகரங்களில் பொது வசதிகள் அபிவிருத்தி செய்தல், நகர்ப்புற வடிகால் வசதிகள் மேம்படுத்தல் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு, சுற்றுலா அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நகர்ப்புற வசதிகளை விருத்தி செய்தல், கழிவு முகாமைத்துவம், பேருந்து நிலையங்கள், பொதுச் சந்தைகள், வாகன நிறுத்துமிடங்கள், போன்ற வசதிகளின் அபிவிருத்தி முக்கியமானது.

எனினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, 2023 ல் திட்டமிட்டதன் பிரகாரம் நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயல்படுத்துவது சவாலாக இருந்தது. மூலப்பொருட்களின் விலை உயர்வினால் நிர்மாண நடவடிக்கைகளின் செலவுகள் அதிகரித்தமை, மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, ஒப்பந்ததாரர்களுக்கு தாமதமாக பணம் செலுத்துதல், சில வெளிநாட்டு நன்கொடை

நிறுவனங்களால் எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கப் பெறாமை, பொது முதலீட்டைக் கட்டுப்படுத்தல் போன்றன இதற்கானக் காரணங்களாகும்.

குறிப்பாக, வீட்டு நிர்மாணத் துறையைப் பொறுத்த வரையில், 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ள கொரோனா தொற்றுச் சூழலின் நேரடித் தாக்கத்தால், நிர்மாணத்துறைக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் கடுமையான விலை உயர்வு, நிர்மாணத் துறைக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலை பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு, அந்நிய செலாவணி பிரச்சனை மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி காரணமாக வீட்டு நிர்மாணத்துறை, பொருளாதார மந்தநிலை காரணமாக 2022 உடன் ஒப்பிடும் பொழுது 2023 இல் மந்தமான வளர்ச்சியைக் காட்டுகிறது. எனினும், இவ் ஆண்டில், பொதுத் தனியார் பங்களிப்பின் கீழ் குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வர்க்க மக்களுக்காக செயல்படுத்தப்பட்ட வீட்டுக் கருத்திட்டங்களும், வெளிநாட்டு மானியங்களின் கீழ் செயல்படுத்தப்பட்ட வீட்டுக் கருத்திட்டங்களும் தொடர்ந்ததுடன், இந்திய அரசாங்கத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட கருத்திட்டங்களுக்கு இங்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மேலும், வரவு செலவுத் திட்டமுன்மொழிவாக ஆரம்பிக்கப்பட்ட கட்டிடங்களிற்கு கட்டிடக் குறியீடுகளை (Buiding Codes) அறிமுகப்படுத்தும் கருத்திட்டம், உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியின் கீழ் இந்த ஆண்டினுள் வெற்றிகரமாக இறுதிக் கட்டத்தை அடைவதற்கு இயலுமாகியுள்ளது.

**செயற்பாடுகள்**

- குறித்த நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 11 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- நகர அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி தொடர்பான 20 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து, அது தொடர்பான அவதானிப்புக்களுடன் தேவையான நடவடிக்கைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- செயற்பட்டுக்கொண்டிருக்கும் கருத்திட்டங்களின் நோக்கில் மாற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் செய்யப்பட்டன.
- பொது முதலீட்டு வேலைத்திட்டத்தை புதுப்பித்தமை.
- கருத்திட்ட வழிநடத்தல் குழுக்கள் / முன்னேற்ற மறுஆய்வுக் குழுக்களில் பங்கேற்றமை.
- வெளிநாட்டு உதவி நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் நிலைமைகளைக் கையாண்டமை.
- தேசிய மற்றும் துறைசார் கொள்கை உருவாக்கத்திற்கான பங்களிப்பை வழங்கியமை.
- கருத்திட்டங்கள் மற்றும் துறை தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தமை
- இத்துறையின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பாக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சு மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியமை

## 2.5. ஆளுகை

2023ஆம் ஆண்டு அரச சேவையில் வினைத்திறனை ஏற்படுத்தும் நோக்கிலும், நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்காகவும் சட்டத்தை அமுல்படுத்தி

பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்காகவும் அரசாங்க கொள்கைகளுக்கு அமைவாக முக்கிய நடவடிக்கைகளை நல்லாட்சிப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இப்பிரிவிற்கு பெறப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து கிடைக்கப்பெறும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அவதானிப்புகளை வழங்கியதுடன் அரச கொள்கைகளுக்கு இணங்க நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் நடுத்தர கால முதலீட்டு வேலைத்திட்டத்தை தயாரித்தல் என்பன இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். மேலும், புதிய தொழில்நுட்பம் மற்றும் யதார்த்தமான பொதுச் சேவையை கட்டியெழுப்பல், நட்புரீதியான வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், ஜனநாயகம் மற்றும் சமத்துவத்தைப் பாதுகாத்தல், மோசடி மற்றும் ஊழலற்ற நாட்டை உருவாக்குதல், பொதுச் சேவையில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் போன்ற நோக்குடன் பின்வரும் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புடைய துறைகளில் திட்டமிடல் செயற்பாடுகளிற்கு செயற்பாட்டு ரீதியில் பங்களிப்பை வழங்கியது.

- பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி
- பொதுமக்கள் பாதுகாப்பு
- தேசியப் பாதுகாப்பு
- வெகுசன ஊடகம்
- நீதித்துறை
- வெளிநாட்டு அலுவல்கள்
- மத, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் தேசிய பாரம்பரியம்
- சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் விசேட செலவின அலகுகள்

இதன்பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் திறமையான மற்றும் திறனுள்ள பொது நிர்வாகத்திற்காக நல்லாட்சி துறையின் கீழ்,

- பொது நிதி அல்லது வெளிநாட்டு நிதி மூலம் நிதியுதவி செய்வதற்கான 48 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- பல்வேறு அமைச்சுக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 41 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.
- பிரிவின் விடயப்பரப்பின் கீழ் உள்ள வழிநடத்தல் குழுவின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான மேலதிக கலந்துரையாடல்களில் பங்கேற்றமை.
- பொருளாதார அபிவிருத்திக்குச் சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் திறமையான பொதுச் சேவையை உறுதிப்படுத்துவதற்கும் செயற்படுகின்ற 09 கருத்திட்ட வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் திணைக்களத்தை / அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் பங்கேற்றமை.

**பேரண்டப் பொருளாதாரம்**

இத் திணைக்களத்தின் பேரண்டப் பொருளாதாரப் பிரிவானது அனைத்து அபிவிருத்தி அம்சங்களையும் ஒரு பேரண்டக் கொள்கைக் கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்கும் பிரிவாகும். இத்துறையானது பொதுவான அபிவிருத்தி இலக்குகளை உருவாக்குவதற்காக அபிவிருத்தியில் ஏனைய துறைகளிற்கும் வழிகாட்டுகிறது. இத் துறையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்களைக் கற்பதுடன், தேசியப் பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களை இனங்கண்டு, வரையறுக்கப்பட்ட வளங்களை மிகவும் திறனான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழிவகுக்க வழிகாட்டுகிறது. இதற்கு மேலதிகமாக, பொது முதலீட்டை நிர்வகிக்கும்

நோக்கில் தற்பொழுது காணப்படுகின்ற தேசிய முன்னுரிமைத் துறைகளிற்கு ஒதுக்குவதற்கு இப்பிரிவினால் 2023 - 2025 பொது முதலீட்டுத் திட்டம் (PIP) தயாரிக்கப்பட்டது. இதன் பிரகாரம், பேரண்டப் பொருளாதாரத் துறையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு.

பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் இனங்கண்டு, கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட வளங்களை அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக திறனாக இயக்குவதற்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

- பொது முதலீட்டுத் திட்டம் 2023-2025இன் தொடர்புடைய அத்தியாயத்தைத் தயாரிக்க அந்தந்தத் துறைகளுக்கு வழிகாட்டுதல்.
- பொது முதலீட்டுத் திட்டம் 2023-2025ஐத் தொகுத்து தேசிய குறிப்பு ஆவணமாக வெளியிட்டது.
- பேரண்டப் பொருளாதாரப் போக்குகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் இலங்கைப் பொருளாதாரத்தில் உள்ள வாய்ப்புக்கள் மற்றும் சவால்களை இனங்காணுதல்.
- பொது நிதியை வலுப்படுத்தும் திட்டம், நிதித்துறை பாதுகாப்பு வலையமைப்புத் திட்டம், நிதி பொருளாதார உறுதிப்பாடு மஅமைச்சின் பொது நிறுவன சீர்திருத்த திட்டம், சீர்திருத்த திட்டம் ஆகியவற்றிற்கான முன்மொழியப்பட்ட கொள்கை அடிப்படையிலான கடன் திட்டம் பற்றிய அவதானிப்புகள் மற்றும் கருத்துக்கள் வழங்கப்பட்டமை.
- பொது நிதி முகாமைத்துவச் சட்டம், பொது கடன் முகாமைத்துவச் சட்டம் மற்றும் கருத்திட்ட அமுல்படுத்தும் முறை பற்றிய சுற்றறிக்கை வரைவதில் உதவுதல்.
- தேசிய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிப்பதை ஒருங்கிணைத்தல்
- பேரண்டப் பொருளாதார முன்கணிப்பில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு திறன் வளர்ப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது

## 2.6. சுற்றாடல் முகாமைத்துவம்

பொருத்தமான முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் வலுவான பொருளாதார விருத்தியை அடைவதற்கு வசதிகளை வழங்குவதுடன், சுற்றாடல் தரத்தை உறுதி செய்வதன் மூலம் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் சுற்றாடல் முகாமைத்துவம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. மாசற்ற சுற்றாடலையும், நச்சற்ற உணவுப் பழக்கத்தையும் உறுதி செய்வதற்காக சுற்றாடல் கொள்கையினூடாக பசுமையான அபிவிருத்தி என்ற கருத்து முக்கிய பங்கு வகிக்கிறது.

சுற்றாடல் முகாமைத்துவத்தின் விடயப்பரப்பில் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல், கழிவு முகாமைத்துவம், வனப் பாதுகாப்பு, நிலையான காணி முகாமைத்துவம், மனித - வனவிலங்கின் இருப்பு, உயிரினப்பாதுகாப்பு மற்றும் நிறுவன மறுசீரமைப்பு ஆகியன உள்ளடங்குகின்றன.

குறைந்தபட்ச கார்பன் நுகர்வுடன் பரிசுத்தமான பசுமையான சுற்றாடலை அண்மித்துக் கொள்ளல், சுற்றாடல் மாசடைவதைக் குறைத்தல், உயர்ந்த உயிர் பல்வகைமை மற்றும் சுற்றாடல் அமைப்பு சேவைகள், சுற்றாடல் அபாயத்தைக் குறைத்தல், திறனான மற்றும் நிலையான வள நுகர்வு மூலம் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்தல், சுற்றாடல் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இயற்கை அபாயங்களின் விளைவுகளைக் குறைத்தல் போன்றன தொடர்பாக சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது. நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு நல்ல சுற்றாடல்

முகாமைத்துவம் மிக முக்கியமான தேவையாகும். எனவே, அபிவிருத்தித் திட்டமிடலில் சுற்றாடல் சமநிலையைப் பேணுவதற்கு அவசியமான பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் / விசேட சந்தர்ப்பங்கள்**

- சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவிற்கு அமைவாக நிரல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 17 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிரல் அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 18 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை ஆய்வு செய்து அமைச்சரவையின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கபட்டது.
- சுற்றாடல் வளங்களின் பெறுமதியை கணக்கிடுவதற்கான வழிகாட்டுதலை (Green Book) தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் (UNDP) நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- சமுத்திர இடம் சார்ந்த திட்டம் (Maritime Spatial Planning) வேலைத்திட்டத்திற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் விசேட காலநிலை மாற்ற அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- இலங்கையிற்காக பசுமையான பத்திரக் கட்டமைப்பு (Green Bond Framework for Sri Lanka) வேலைத்திட்டத்திற்கான தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.
- கார்பன் தேறிய பூச்சிய சாலை வரைபடம் (Carbon Net Zero Road MaP) மற்றும் மூலோபாய திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக நிறுவனங்களின் தொழில்நுட்பத் திறனைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டத்திற்கான யோசனைகளை வழங்குதல்.
- காலநிலை நிதி வலையமைப்பு (Climate Finance Network) கருத்திட்டத்தின் கீழ் காலநிலை வரவு செலவுத் திட்டத்தைக் குறியிடல் வேலைத்திட்டத்திற்கான பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தினால் (IWMI) நிகழ்த்தப்படுகின்ற Work plan and way forward of climate smart Governance Dashboard வேலைத் திட்டத்திற்கான விவரங்கள் / உள்ளீட்டை வழங்கியமை.
- சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவின் கருத்திட்டங்களை முன்னுரிமைக்கேற்ப ஒழுங்குபடுத்தல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்குதல்.
- சுற்றாடல் துறை தொடர்பான பல்வேறு இயக்கக் குழுக்களில் பங்கேற்பு.
- வெளிநாட்டுத் தூதுக்குழு தொடர்பான விடயங்களுக்கு அவதானிப்பை வழங்குதல்.

**இடர் முகாமைத்துவம்**

இடரொன்றை எதிர்கொள்வதற்காக வளங்களை ஒழுங்கமைத்து வழிநடத்துதல் இடர் முகாமைத்துவம் எனப்படும். மேலும், அது தொடர்பான பொறுப்பு, இடர்களை எதிர்கொள்பவர்கள், தனியார் துறை நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வ தொண்டர்கள், நன்கொடையாளர்கள் போன்ற அனைவரின் பாத்திரங்களும் பொறுப்புகளும் மற்றும் நன்கு ஒருங்கிணைந்த முறையில் செய்யப்பட வேண்டும். இடர் முகாமைத்துவத்தின் முதன்மை நோக்கமாக அமைவது, அதற்கு ஏற்ப தயார்படுத்தல், பதிலளிப்பு, மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புதல் மற்றும் இழிவு நிலையின் மூலம் விளைவுகளை குறைப்பதாகும்.

நிகழ்கால அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக பிரதேச அபிவிருத்தித் திட்டம் இடர் அபாயத்தைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் நிறுவன அபிவிருத்தி, பல் ஆபத்து முன்னெச்சரிக்கை அமைப்புகளின் கீழ் இடர் முகாமைத்துவத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் அண்ணளவாக வருடாந்தம் ரூபா. 4 பில்லியன் செலவிடப்படுகிறது.

மேலும், செண்டாய் (Sendai) கட்டமைப்பு போன்ற, சர்வதேச பொறுப்புக்களுக்கு அமைவாக இடர் அபாயத்தைப் புரிந்துகொள்ளல், இடர் அபாயக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தலினூடாக இயற்கையாகவோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டதாகவோ அல்லது சுற்றுச்சூழல், தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் சிக்கல்களால் ஏற்படும் அபாயங்களை அனைத்து முறைமைகளிலும் குறைத்துக் கொள்வதற்கு எதிர்ப்பார்ப்பதுடன் அதனூடாக இடர் அபாயத்தைக் குறைப்பதற்காக முதலீடு செய்தல், திறனான பதிலளிப்பிற்காக இடர் தயார்நிலையை விருத்தி செய்தல் மற்றும் மீட்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு என்பன எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**விசேட சந்தர்ப்பங்கள்**

- அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு அமைவாக பாதுகாப்பு அமைச்சின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட 03 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- கருத்திட்டச் சமர்ப்பிப்புப் படிவத்தின் (ீசழதநஉவ ளரடிஅளைளழைெ கழசஅயவ) பிரிவு 14 (பேரழிவு அபாயக் குறைப்பு) க்கான வழிகாட்டுதல் கையேட்டைத் தயாரிப்பதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (JICA) இணைந்து பணியாற்றியமை.
- இடர் முகாமைத்துத் துறையில் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு குறித்த நிரல் அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
- வெளிநாட்டுத் தூதுக்குழு தொடர்பான விடயங்களுக்கு அவதானிப்பை வழங்குதல்.

## 2.7. சமூகப் பாதுகாப்பு

சமூகத்தில் வாழ்கின்ற சலுகையற்ற அனைத்து பிரிவினரிற்காகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் மற்றும் மேம்படுத்துவதினூடாக நாட்டின் அபிவிருத்தி அணுகுமுறையை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட சமூகப் பாதுகாப்பு முன்மொழிவுகளை அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது. மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு சிறுவர்கள், பின்தங்கிய பெண்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட பாதிக்கப்படக்கூடிய பிரிவினர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் பிரதான அமைச்சாகும். இதன்பிரகாரம், இப்பிரிவினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கும் சமூகத்தின் பிரதான ஓட்டத்திற்கு கொண்டு வருவதற்கும் தேசிய திட்டமிடல் திணைக்களம் நிரல் அமைச்சுக்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**2023.12.31 திகதி அன்று முன்னேற்ற மீளாய்வு**

- கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டமை

| | கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| கருத்திட்ட முன்மொழிவுகள் | 04 | 04 |

| | | |
|---|---|---|
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் | 03 | 03 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான கருத்துக்கள் | 04 | 04 |

- **கொள்கை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு** - பின்வரும் கொள்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு அவதானிப்புகள் வழங்கப்பட்டன
  - இலங்கையில் சிறுவர்கள் மதியநேர பராமரிப்பு வசதிகள் தொடர்பான தேசிய கொள்கை
  - பாலின சமத்துவம் மற்றும் மகளிர் வலுப்படுத்துகை மீதான தேசியக் கொள்கை
- **தேசிய கொள்கை உருவாக்கம்** - இலங்கைக்கான தேசிய சமூக பாதுகாப்பு கொள்கை மற்றும் மூலோபாய ஆவணம் வரைவு செய்யப்படுகிறது.
- **பின்வரும் அறிக்கைகள் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டன**
  - 2023, UPR; 4வது சுழற்சி
  - பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு (CEDAW)
  - விசேட தேவைகள் கொண்ட சமூகத்தினரின் வசதிகளை வழங்குவதற்கான தேசிய வேலைத்திட்டம்
  - தெற்காசிய நடவடிக்கைகளில் பாலின சமத்துவம் மற்றும் சமூக பங்களிப்பை ஊக்குவித்தல்
  - இலங்கை: முன்பள்ளி சிறுவர் மேம்பாட்டுத் திட்டம் (P151916), நடைமுறைப்படுத்தல் மற்றும் முடிவு அறிக்கையின் நிறைவு
  - இலங்கையில் மனித உரிமை தொடர்பான நிலைமை
  - ஆசியா மற்றும் பசிபிக் பகுதியில் ஒரு விரிவான மற்றும் நெகிழ்ச்சியான சமூக பாதுகாப்பு அமைப்பை உருவாக்குதல்
- **கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்**
  - சமூகப் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய நிரல் நிறுவனங்களால் நிகழ்த்தப்படும் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களில் பங்கேற்று, சமூகப் பாதுகாப்பு செயல்திறனை மேம்படுத்த தேவையான உள்ளீடுகளை வழங்கியது.

**உழைப்பு**

பொருளொன்று அல்லது சேவையை சந்தைக்குக் கொண்டுவருவதற்கு ஒரு நபர் எடுக்கும் உடல் மற்றும் உள ரீதியிலான முயற்சி அல்லது உழைப்பு, உற்பத்தியில் மிக முக்கியமான காரணியாகும். உழைப்பைக் கருத்தில் கொள்ளும்போது, தனிநபரின் திறன் நிலை, கல்வி மற்றும் உற்பத்தித்திறனில் ஆர்வம் ஆகியவை நம்பமுடியாத முக்கியமான காரணிகளாகும். எனவே, பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தித்திறன் உழைப்பின் தரத்தில் தங்கியுள்ளது. "தேசிய உருமாற்ற சாலை வரைபடத்தின் (National Transformation Road Map)" இந்த பிரகாரம் 2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை செழிப்பான தேசமாக அபிவிருத்தியடையச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ள நிலையில், திறமையான மற்றும் பயனுள்ள தொழிலாளர்களை உருவாக்குவது அவசியமாகும். விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும், உற்பத்தியை அதிகரிப்பதற்கும், நமது நாட்டில் தொழில்நுட்பம், அறிவு மற்றும்

திறன்களின் அடிப்படையிலான ஊழியப்படையை உருவாக்க வேண்டும். மேலும் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதன் மூலம், நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு சாதகமான தீர்வைப் பெற முடியும். இது அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வை வழங்குவதுடன் நீண்டகாலத்தில், உயர் தொலைநோக்கு மற்றும் தொழில் முனைவோர் திறன்களைக் கொண்ட திறமையான பணியாளர்கள் நாட்டில் விருத்தியடையும். வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் புலம்பெயர்ந்தோரால் பெறப்படும் தொகையை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உழைப்புப் பிரிவு, தொழிலாளர் திணைக்களம், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடன் இணைந்து கொள்கை உருவாக்கம், கருத்திட்ட மதிப்பீடு, அமைச்சரவைப் பத்திரங்களிற்கு அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் தேசிய/துறை அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பிடுவதில் பங்களிப்பை வழங்குகிறது. அதன்பிரகாரம், உழைப்புப் பிரிவு 2023 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளை நிறைவு செய்தது.

- ஒரு கருத்திட்ட முன்மொழிவு மதிப்பீடு செய்யப்பட்டு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.
- தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 8 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகவர்களின் ஆதரவுடன் நிதி அமைச்சு மற்றும் ILO க்கு இடையேயான ஒப்பந்தத்தின் பிரதிபலனாக, வெளிநாட்டு தொழிலாளர் புலம்பெயர்ந்தோருக்கான அவசரகால வெளியேற்ற மறுமொழித் திட்டத்தை உருவாக்குவதற்கு ஆதரவு வழங்கப்பட்டு வருகிறது.
- வேலைவாய்ப்புக்கான இடம்பெயர்வு தொடர்பான இலங்கை தேசிய கொள்கை, 2023 – 2027 காலப்பகுதிக்கான செயற்றிறன் திட்டத்தை தயாரிப்பதில் பங்களித்தது.

## 2.8. பிரதேச அபிவிருத்தி

மகிழ்ச்சியான கிராமம் / பிரதேசத்தைக் கட்டியெழுப்புதலை நோக்காகக் கொண்டு, வறுமையை ஒழிப்பதற்கும், நிலவும் பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, பிரதேசத்தின் தனித்தன்மைகளைக் கண்டறிந்து அனைத்து சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, துறையுடன் தொடர்புடைய கொள்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான கொள்கை உள்ளீடுகள் (policy inputs) வழங்கப்படுகின்றன. மேலும், துறைசார் மற்றும் நடுத்தர கால திட்டமிடல், கருத்திட்ட மதிப்பீடு, கருத்திட்ட வரிசைப்படுத்தல் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிராந்திய அபிவிருத்தியில், கிராமத்தை தனிமைப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக, பிரதேசங்களை கிராமத்துடன் இணைத்து பிரதேசமாக அபிவிருத்தி செய்வதும், அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை தலைநகரங்களுடன் இணைக்க வேண்டும் என்பதும் தற்போதைய அபிவிருத்திக் கொள்கைகளின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.இதன்பிரகாரம், தேசிய மட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, அந்தந்த பிரதேசங்களிலுள்ள வளங்களை உகந்த மற்றும் நிலையான மட்டத்தில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இப் பிரிவு வலியுறுத்துகிறது. இத் துறையின் அபிவிருத்திக்காக உள்நாட்டு நிதிகள், வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு நன்கொடைகள் (Grant Assistance) என்பன பயன்படுத்தப்படுகின்றன.

அனைத்து மாகாண சபைகளுக்கும், நிதி ஆணைக்குழுவினால் நிகழ்த்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இப்பிரிவு பொருத்தமான உள்ளீடுகள்/ அவதானிப்புகளை வழங்கியது.

..................................................................

பி.க .உ / க.உ / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

R.H.W.A.Kumarasiri
Director General
National Planning Department
Ministry of Finance
The Secretariat
Colombo - 01

# அத்தியாயம் 03 - 2023 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்

## 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ஏசீஏ- எப் |
| | **2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று** | | | | |
| | | | | (ரூபா) | |
| **திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023** | | **குறிப்பு** | **உண்மை நிலை 2023** | **2022** | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | **1** | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | **2** | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | **3** | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | **4** | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 183,039,000 | 304,415,300 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 20,262,219 | 157,382 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 8,747,669 | 8,352,736 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **212,048,889** | **312,925,418** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **212,048,889** | 312,925,418 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **3,105,286** | **128,177,563** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **208,943,603** | **184,747,855** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 100,127,991 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | **5** | 95,048,055 | 108,337,954 | |
| 31,706,199 | ஏனைய பொருட்கள் சேவைகள் | **6** | 31,040,275 | 33,416,395 | ஏசீஏ-2(ii) |
| 2,958,239,904 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 2,958,239,904 | 108,958,100,969 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | **9** | - | - | |
| 3,090,074,094 | **மொத்த மீண்டுவரும செலவினம் (ஊ)** | | **3,084,328,234** | **109,099,855,318** | |
| | **மூலதன செலவினம்** | | | | |
| 3,834,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 2,147,633 | 864,637 | |
| 96,165,384 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 11,377,135 | 5,753,519 | |
| 13,965,806,818 | மூலதன மாற்றல்கள் | **12** | 12,099,207,729 | 6,963,769,597 | ஏசீஏ-2(ii) |
| 2,114,353,125 | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | 2,114,353,125 | 41,465,777,225 | |
| 47,500 | திறன் விருத்தி | **14** | 47,500 | 173,000 | |
| 7,545,208,407 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | 7,409,605,493 | 8,079,370,749 | |
| 23,725,415,234 | **(எ)** | | **21,636,738,615** | **56,515,708,727** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 17,926,671 | 157,382 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 5,310,771 | 5,760,643 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **23,237,442** | **5,918,025** | |
| | **மொத்த செலவினம ஐ = (ஊ+எ+ஏ)** | | 24,744,304,291 | 165,621,482,070 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (24,535,360,688) | (165,436,734,215) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (24,535,360,688) | (165,436,734,215) | ஏசீஏ-7 |
| 26,815,489,328 | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | ஏசீஏ-3 |

## 3.2. நிதி நிலைமை தொடர்பான கூற்று

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகர | ஏசீஏ-6 | 131,980,342 | 127,859,188 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 11,670,024 | 15,106,922 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **143,650,365** | **142,966,110** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 9,334,475 | 15,106,922 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 131,980,342 | 127,859,188 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 2,335,548 | - |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **143,650,365** | **142,966,110** |

பக்க இலக்கம் 07 முதல் 31 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 32 முதல் 40 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: கே. எம். மஹிந்த சிறிவர்தன | பெயர்: ஆர்.எச்.டபிள்யூ.ஏ.குமாரசிறி | பெயர் : டபிள்யூ.எஸ்.பி.டி.மெல் |
| பதவி : செயலாளர் | பதவி : பணிப்பாளர் நாயகம் | |
| திகதி : 28/02/2024 | திகதி : 21/02/2024 | திகதி : 21/02/2024 |
| K.M.M. Siriwardana<br>Secretary to the Treasury and<br>Secretary to the Ministry of Finance,<br>Economic Stabilization and National Policies<br>The Secretariat<br>Colombo 01. | R.H.W.A.Kumarasiri<br>Director General<br>National Planning Department<br>Ministry of Finance<br>The Secretariat<br>Colombo - 01 | W.S.P. De Mel<br>Accountant<br>Department of National Planning<br>The Secretariat, First Floor,<br>Colombo - 01 |

2

## 3.3. காசுப்பாய்ச்சல் தொடர்பான கூற்று

| | | |
|---|---|---|
| | | ஏசீஏ- சீ |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று** | | |
| | **உண்மை** | |
| | **2023** ரூபா | **2022** ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 1,489,528,269 | 9,943,825,651 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 5,257,944 | 5,965,003 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 183,039,000 | 304,415,300 |
| முற்பணங்களை அறவிடல் | 6,151,289 | 5,638,363 |
| வைப்புக்களின் பெறுகை | 20,262,219 | 157,382 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு** | **1,704,238,722** | **10,260,001,699** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் | 1,669,987,990 | 10,120,132,927 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 976,976 | 1,308,933 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட | - | 185,745 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 3,105,286 | 128,177,563 |
| முற்பணக் கொடுப்பனவு | 5,581,605 | 4,285,631 |
| வைப்புக் கொடுப்பனவு | 17,926,671 | 157,382 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு** | **1,697,578,528** | **10,254,248,180** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **6,660,194** | **5,753,519** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதன செலவினம் | 6,660,194 | 5,753,519 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு** | **6,660,194** | **5,753,519** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(6,660,194)** | **(5,753,519)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **0** | **(0)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.4. நிதிக் கூற்றிற்கான குறிப்பு

## 3.5. வருமான சேகரிப்பின் செயற்றிறன் - பொருத்தமற்றது

ரூ.,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விளக்கம் | வருமான மதிப்பீடு | | சேகரித்த வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | பெறுமதி (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் மூ ஆக |
| - | - | - | - | - | - |

## 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன்

ரூ.,000

| பெறுகை வகை | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு முடிக்கப்பட்ட இறுதி நிதி ஏற்பாட்டுப் பெறுமதியின் % ஆக |
|---|---|---|---|---|
| | தொடக்க நிதி ஏற்பாடு | இறுதி நிதி ஏற்பாடு | | |
| மீண்டு வரும் செலவினம் | 8,146,830,000 | 3,090,074,094 | 3,084,328,234 | 99.81 |
| நிலையான செலவினம் | 2,772,000,000 | 23,725,415,234 | 21,636,738,615 | 91.20 |
| மொத்தச் செலவினம் | **10,918,830,000** | **26,815,489,328** | **24,721,066,848** | **92.19** |

## 3.7. நி.பி 208 இற்கு அமைவாக, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் ஒரு முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

ரூ.,000

| துணை இல. | ஒதுக்கப்பட்ட அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு முடிக்கப்பட்ட இறுதி நிதி ஏற்பாட்டுப் பெறுமதியின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | தொடக்க ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | | பொருத்தமற்றது | | | | |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று

ரூ.,000

| சொத்துக் குறியீடு | குறியீடு விளக்கம் | 31.12.2023 இன் சரக்கு கணக்கெடுப்பு அறிக்கையின்படி இருப்பு | 31.12.2023 இன் நிதி நிலை அறிக்கையின்படி இருப்பு | எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டும் | % ஆக முன்னேற்றத்தை அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | | 33,810,000.00 | | |
| 9152 | வாகனங்கள் | | 56,595,763.00 | | |
| 9152 | இயந்திரங்கள் மற்றும் பிற | | | | |
| 9153 | காணி | | 41,574,578.86 | | |
| 9154 | அருவச் சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | குறை வேலை | | | | |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகள் | | | | |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை இணைப்பு I இல் உள்ளது.

## அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்)

| குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100%- 90% | 75%-89% | 50%- 74% |
| தொகுக்கப்பட்ட கொள்கைகளின் எண்ணிக்கை | | 78.57% | |
| மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | | 81.27% | |
| வழங்கப்பட்ட அவதானிப்புகளின் எண்ணிக்கை | 99.69% | | |
| மதிப்பிடப்பட்ட தேசிய.:. துணை தேசிய திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | |

# அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயற்திறன்

## 5.1 இனங்காணப்பட்டுள்ள குறித்த நிலையான அபிவிருத்தி இலக்குகள்

இத்திணைக்களம் செயற்பாடுகளை திறனாக நிறைவேற்றும் வகையில், பொருளாதாரம் மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை உள்ளடக்கிய 9 பிரிவுகளாகவும், 26 துணைப்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளும் அவை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் திட்டங்களைத் தயாரித்து, மேற்கொள்ளப்படும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளிற்கு அமைவாக செயற்படுகின்றன. இதன் பிரகாரம், குறித்த அமைச்சுக்களினால் ஆரம்ப அனுமதியைப் பெறுவதற்கு 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அனைத்து கருத்திட்ட அறிக்கைகளும் குறித்த கருத்திட்ட சமர்ப்பிப்பு மாதிரியின் பிரகாரம் இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. கருத்திட்ட சமர்ப்பிப்பு மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ள 11 வது பிரிவின் பிரகாரம், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு முன்மொழியப்பட்ட கருத் திட்டங்களின் பங்களிப்பு மதிப்பிடப்படுகிறது. அதன் பிரகாரம், 244 குறிகாட்டிகள், 169 இலக்குகள் மற்றும் 17 குறிக்கோள்களைக் கொண்ட நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலுடன் தொடர்புடைய அனைத்து நிலையான அபிவிருத்தி குறிக்கோள்களும் (17), இலக்குகள் மற்றும் கொள்கை முடிவுகள் ஆகியவை இத்திணைக்களத்தினால் கருத்திட்ட மதிப்பீட்டின் போது பரிசீலிக்கப்படுகின்றன.

